**தேதி - 14.02.2023 அசல் வழக்கு எண்.221/2017 பி.சா.1 (மகாராஜன்)**

**பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய இடைநிலை மனு எண்.377/2022, 396/2022 ஆகிய இருமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுக்கள் கடந்த 01.12.2022 ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6, 7, 8 ஆவணங்கள் எங்களுடைய வங்கி கோப்பில் தான் இருந்தது. எங்கள் வங்கியிலுள்ள வாதி கணக்கு சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் வழக்கின் வாதி சம்பந்தப்பட்ட வரவு செலவுகள் தெரிய வரும் என்றால் சரியல்ல. வாதி சம்பந்தப்பட்ட எங்கள் வங்கி கணக்கின் கோப்பு முழுவதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வாதி சம்பந்தப்பட்ட வங்கி கணக்குகளை ஏற்கனவே தாக்கல் செய்துவிட்டோம். வாதி வாங்கிய Inventary funding facility கணக்கில் வாதிக்கு சரக்கு சப்ளை செய்ததற்கான இன்வாய்ஸ் அதற்கு பணம் release பண்ணியது மற்றும் கடன் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் கையாளப்படும் என்று சொன்னால் சரியல்ல. வாதி அனுப்பிய invoice அனைத்தும் 1 ம் பிரதிவாதியிடமும் இருக்கும் எங்களிடமும் அனுப்பப்படும் என்று சொன்னால் சரிதான். Invoice ன் அடிப்படையில் பணம் release செய்த விபரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்கள் எங்கள் வங்கி அலுவலக கோப்பில் உள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக வாதி அனுப்பிய invoice நகல்கள் அனைத்தும் எங்களுடைய வங்கியில் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.6 ஆன ஆவணத்தின் முதல்பக்கத்தில் அடிக்கப்படவும் இல்லை, நிரப்பப்படவும் இல்லை என்று சொன்னால் சரிதான். அது தேவையில்லாத விபரங்கள் என்பதால் நிரப்பப்படவில்லை. பி.சா.ஆ.6 ல் பக்கம் எண்.5 ல் எத்தனை நாட்களுக்குள் dispurse செய்ய வேண்டுமென்ற ஒரு காலமும், margin எவ்வளவு சதவிகிதம் maintain என்ற விபரமும், அதே பக்கத்தில் வட்டி எவ்வளவு சதவிகிதம் என்ற விபரமும் நிரப்பப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மெயின் அக்ரிமெண்ட் தாக்கல் செய்துள்ளோம். அதில் உள்ளது. மெயின் அக்ரிமெண்ட் என்று போடப்பட்டது என்ற விபரம் தெரியாது. 2010 ம் வருடம் அக்ரிமெண்ட் போடப்பட்டது. ஆனால் தேதி ஞாபகமில்லை. பி.சா.ஆ.6 ஆன ஆவணத்தில் ஏற்கனவே ஒரு அக்ரிமெண்ட் போடப்பட்டது என்றும், அதன் தொடர்ச்சியான அக்ரிமெண்ட் தான் பி.சா.ஆ.6 என்றும், மேற்படி விபரம் பி.சா.ஆ.6 ஆன ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். பி.சா.ஆ.7 ஆன ஆவணத்தின்படி இருசக்கரவாகனத்தை வாதிக்கு டெலிவரி செய்த பின்னர் அவர்கள் பணத்தை 1 ம் பிரதிவாதிக்கு dispurse செய்ய வேண்டுமென்று

வேண்டுகோள் கொடுத்த பிறகு தான் fund release செய்து கொடுக்க வேண்டும் என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதி தான் வேண்டுகோள் எங்களுக்கு கொடுக்க வேண்டும். வாதிக்கு 1ம் பிரதிவாதியால் இருசக்கரவாகனங்கள் அனைத்தும் டெலிவரி செய்யப்பட்டு, அதன்பின்பு வாதி பணத்தை 1ம் பிரதிவாதிக்கு release செய்யும்படி கோரிய பின்புதான் பணம் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு release என்பதை காண்பிக்க நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதற்கான அனைத்து ஆவணங்களும் 1ம் பிரதிவாதி வசம் தான் உள்ளது. வாதிக்கு 1ம் பிரதிவாதியால் இருசக்கரவாகனங்கள் அனைத்தும் டெலிவரி செய்யப்பட்டு, அதன்பின்பு வாதி பணத்தை 1ம் பிரதிவாதிக்கு release செய்யும்படி கோரிய பின்புதான் பணம் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு release செய்ய வேண்டும் என்பது ஒப்பந்தம் மற்றும் பி.சா.ஆ.7 லிலும் அவ்வாறு தான் கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதியும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்து இருசக்கரவாகனங்கள் டெலிவரி செய்யப்பட்டது என்று invoice கொடுப்பார்கள். மேற்படி invoice அனைத்தும் எங்கள் வங்கிக்கு வந்தது, அதனடிப்படையில் தான் நாங்கள் fund release செய்தோம் என்பதை காண்பிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் soft copy என்பதாலும், நீண்ட நாள்கள் ஆகிவிட்டதாலும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மேற்படி invoice சம்பந்தப்பட்ட soft copy ஆவணம் எங்கள் வங்கி வசம் இன்றும் உள்ளது என்றும், அவைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் 1, 3 பிரதிவாதிகளும் கூட்டுசதி செய்து வாதிக்கு இழப்பு ஏற்பட்டது தெரிந்துவிடும் என்பதால் வேண்டுமென்றே அதை நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்குரையில் கோரியுள்ள தொகையை எங்கள் வங்கியும் செலுத்த கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஏற்பட்ட இழப்பிற்கு 1, 3 பிரதிவாதிகளும் கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.